**செய்தி வெளியீடு எண்: 188** **நாள் : 11.04.2016**

**<u>செய்தி வெளியீடு</u>**

**தேர்தல் விதிமீறல் – உரிய ஆவணங்கள் இல்லாமல் கொண்டு சென்ற லாட்டரி சீட்டுகள், மதுவகைகள் பறிமுதல் – இதவரை ரூ. 21.56 கோடி ரொக்கம் பறிமுதல் – 11.4.2016 வரை 2.91 லட்சம் புகார்கள்.**

•••••

தமிழ்நாடு சட்டப்பேரவை தேர்தல் நன்னடத்தை விதிமுறைகள் அமலுக்கு வந்துள்ளதால், பறக்கும் படையினர் 9.4.2016 அன்று சோதனை செய்தபோது மொத்தம் ரூ.18.91 லட்சம் ரொக்கமும், நிலையான கண்காணிப்புக் குழுவினர் சோதனை மேற்கொண்ட போது, ரூ.6.14 லட்சம் ரொக்கமும் மற்றும் மதுவகைகளும் பறிமுதல் செய்யப்பட்டது.

பறக்கும் படையினர் 9.4.2016 அன்று சோதனை மேற்கொண்டபோது கன்னியாக்குமரி மாவட்டத்தில் ரூ.2.79 லட்சம், நாமக்கல் மாவட்டத்தில் ரூ.9.71 லட்சம், நீலகிரியில் ரூ.1.97 லட்சம், புதுக்கோட்டை மாவட்டத்தில் ரூ.1.20 லட்சம், தூத்துக்குடி மாவட்டத்தில் ரூ.3.25 லட்சம் உட்பட மொத்தம் ரூ.18,91,460/– ரொக்கமும், ரூ.1.55 லட்சம் மதிப்புள்ள லாட்டரி சீட்டுகளும் பறிமுதல் செய்யப்பட்டன. மேலும் நிலையான கண்காணிப்புக்குழுவின் (SST) சோதனையில் மதுரை மாவட்டத்தில் ரூ.2.95 லட்சம், கன்னியாக்குமரியில் ரூ.1.85 லட்சம், வேலூாில் ரூ.1.34 லட்சம் உட்பட மொத்தம் ரூ.6,13,930/– ரொக்கமும், மதுவகைகளும், பறிமுதல் செய்யப்பட்டது.

இதுவரை நிலையான கண்காணிப்புக் குழுவினரால் மொத்தம் ரூ.12,77,97,354/– ரொக்கமும், பறக்கும் படையினரால் ரூ.8,77,96,150/– ரொக்கமும் பறிமுதல் செய்யப்பட்டுள்ளது.

அனுமதியில்லாமல் தேர்தல் பிரச்சாரம் மேற்கொண்டது, போஸ்டர்கள் ஒட்டியது, கட்சி கொடிகளை அகற்றாதது உட்பட பல்வேறு விதிமீறல்கள் தொடர்பாக கட்சியினர் மீது வழக்கு பதியப்பட்டுள்ளது.

தேர்தல் விதிமுறைகளை மீறி சுவர் விளம்பரம், போஸ்டர், பேனர்கள் போன்ற விளம்பரங்களை மேற்கொண்டதாக இதுவரை 2,91,527 புகார்கள் பெறப்பட்டதில் 2,83,163 புகார்களில் விளம்பரங்கள் அழிக்கப்பட்டுவிட்டன.

**வெளியீடு:**

**இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத் துறை, சென்னை–9**